**OS No.126/2020 :**

Date : 02.12.2025

பி.சா.1 : முருகன்

பி.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

தபசில் சொத்தின் சர்வே எண்.168/8 பி என்பதாகும். மொத்த அளவு 2 ஏக்கர் 63 செண்டு ஆகும். அது புஞ்சை நிலமாகும். தபசில் சொத்தில் கிணறு கிடையாது என்றால் போர்வெல் உள்ளது. அதில் மின் இணைப்பு உள்ளது. மின் இணைப்பு எண் என்னவென்றால் நம்பர் தெரியாது. தபசில் சொத்தில் ஆழ்துளை கிணறு இருக்கிறது என்றும் மின் இணைப்பு விவரங்களை எனது பதிலில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். எனது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. ஆனால் ஆவணங்கள் கொடுத்துள்ளேன். தபசில் சொத்திற்கு கீழ்பக்கம் வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த சர்வே எண்.166 ஆகும். மேற்படி கிணற்றில் இருந்து தபசில் சொத்திற்கு வரக்கூடிய கால்வாய் இருக்கிறது என்றால் சரியல்ல. மேல்பக்கமும் வாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்து இருந்தது என்றால் தற்போது இல்லை. 15 வருடங்களுக்கு முன் இருந்தது. சர்வே எண்.168 போக வட பக்கமோ தென்பக்கமோ வேறு சொத்துகள் உள்ளதா என்றால் என் மனைவி இடம் உள்ளது. என் இடம் இல்லை. தபசில் சொத்தில் உள்ள மரங்களை வெட்டுவது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது என்றால் சரியல்ல. 17.01.2018 ம் வருடத்திற்கு பின்புதான் வாதிக்கும் எனக்கும் பிரச்சனை வந்தது என்றால் 2013 ம் வருடத்திலேயே நான் நில மோசடி புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மேற்படி முதல் தகவல் அறிக்கை ரத்து செய்யப்பட்டு குற்றப்பத்திரிக்கை இன்னும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதற்குள் அவர்கள் சிவில் வழக்கு போட்டுவிட்டதால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆதியில் தபசில் சொத்து வாதியின் தகப்பனாரின் தகப்பனாரான சுடலை முத்துவிற்கும் லெட்சுமி அம்மாளுக்கும் கூட்டாக உரிமை உடையது என்றால் சரியல்ல. சுடலை முத்து கோனார் மகன் பெரியசாமி கோனாருக்கும் இராமன் மகன் சுடலை முத்துவிற்கும் 1981 ல் ஏற்பட்ட பரிவர்த்தனை பத்திரத்தின் படி 14 செண்டு மட்டும் பாத்தியம் ஆகும். UDR திட்டத்திற்கு முன்பு

உள்ள பட்டாக்கள் என் தாய் தகப்பனார் யார் பெயிரிலாவது இருக்கிறதா என்றால் இருக்கிறது. என் அப்பா அம்மா பெயரில் உள்ள பழைய பட்டாக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாசில்தாரை விசாரணை செய்து பழைய பட்டாக்கள் யார் பெயரில் உள்ளது என்ற உண்மை விவரங்கள் தெரியவரும் என்றால் சரிதான். தற்போது உள்ள பட்டாக்கள் முறையான விசாரணையின் படி வழங்கப்படவில்லை என்றால் சப் கலெக்டர் அவர்கள் நேரடியாக வந்து எனது பெயரில் பட்டா கொடுத்தார்கள். வாதியும் வாதியின் தகப்பனாரும் அவரின் தகப்பனாரும் மோசடி ஆவணங்கள் பதிவு செய்யாததால்தான் குற்றப்பத்திரிக்கை குற்ற வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்து வாதியின் தகப்பனார் அவரின் தகப்பனார் சுடலைமுத்துவிற்கு பாத்தியப்பட்டு அவர் ஆண்டு அனுபவம் செய்து மாடசாமிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனை அடிப்படையாகக்கொண்டுதான் வாதிக்கு மாடசாமி பிராது தபசில் சொத்தை பொறுத்து செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்து ஆளுகையும் அனுபவமும் உரிமையும் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பழைய பட்டாக்கள் மாடசாமியின் தகப்பனார் சுடலைமுத்துவின் பெயரில் இருந்தது என்றும் அதன் அடிப்படையில்தான் Ex.A1 to A4 வரையிலான ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா-ஆ.1 ஆவணம் 28.09.1981 ம் தேதியிட்ட சுடலை முத்து மற்றும் பெரியசாமி கோனார் ஏற்படுத்தியது என்று கூறும் ஆவணம் போலி மற்றும் மோசடியானது என்றால் சரியல்ல. மேற்படி சுடலைமுத்துவிற்கும் மாடசாமியின் தந்தை சுடலை முத்துவிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணம் மூலம் எனக்கு எந்த வித உரிமையும் ஆளுகையும் அனுபவரும் ஏற்படாது என்றால் சரியல்ல. தபசில் சொத்தினை பொறுத்து எனது தகப்பனாரும் தாய் பார்வதிக்கும் எந்த உரிமையும் இல்லை என்றாலும் ஆகவே அவர்கள் எழுதி கொடுத்த ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் மோசடியானது மற்றும் செல்லாது என்றால் சரியல்ல. வாதிக்கு வழக்கு படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.